செ.வெ.எண் : 467/2023 நாள்: 16.08.2023

**மகளிர் திட்ட அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் எம்.ஐ.எஸ் அனலிஸ்ட் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. செ.கார்மேகம், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

சேலம் மாவட்டம், மகளிர் திட்ட அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் எம்.ஐ.எஸ் அனலிஸ்ட் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.கார்மேகம், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

சேலம் மாவட்டம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மகளிர் திட்ட அலுவலகத்தில் எம்.ஐ.எஸ் அனலிஸ்ட் பணிக்கு தகுதியுடைய நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

எம்.ஐ.எஸ் அனலிஸ்ட் பணிக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கான வயதுவரம்பு 30 வயதும், கல்வித்தகுதியாக பி.இ அல்லது பி.டெக் கணினி அறிவியல்/ ஐ.டி/ கம்ப்யூட்டர் அப்ளிகேசன்/ முதுநிலை அறிவியல் (ஐ.டி) அல்லது கணினி அறிவியல், இதர முதுநிலை கணினி அறிவியல் தொடர்பான படிப்புகள். மேலும், கணினி தொடர்பான பணிகளில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மாதம் ஊதியம் ரூ. 25,000/- ஆகும்.

தேர்தெடுக்கப்படும் பணியாளர் ஒப்பந்த அடிப்படையில் வெளிசந்தை மூலம் நியமனம் செய்யப்படுவார். விண்ணப்பங்களை இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், அறை எண்: 207, மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சேலம் - 636 001 என்ற முகவரியில் நேரிலோ அல்லது தபாலிலோ 21.08.2023 ஆம் தேதிக்குள் அனுப்ப தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.கார்மேகம்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம் மாவட்டம்.

IPROSalem PRO Salem pro.slm PRO Salem